1986 மே 5]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இட வசதியை சேர்ந்தெடுத்து கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாநகராட்சி பார்வையிட்ட பிறகு அது சரியான இடமாக இருக்குமென்று தெரிந்தால் அதுகுறித்து பரிசீலிக்கலாம்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் இருக்கிற இடுகாடுகளில் அங்கே பணியாற்றும் வெட்டியான்கள் அதிகமாகக் கட்டணத்தை பிணத்தை எரிப்பதற்கும், புதைப்பதற்கும் வசூலிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அரசு ஒரு கட்டணத்தை நிர்ணயித்து மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி அலுவலகங்களில் அதனை பெற்றுக் கொண்டு, நிர்ணயித்த கட்டணத்திற்கு மேல் வசூலிக்காமல் இருக்கிற வகையில் ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி நிர்ணயித்திருக்கிற கட்டணங்களை விட சில இடங்களில் இப்படி அதிகக் கட்டணங்கள் வசூலிக்கிறார்கள், தவறு செய்கிறார்கள் என்பது உண்மைதான், அரசுக்கு அது குறித்து புகார்கள் வந்திருக்கின்றன என்று ஒப்புக்கொண்டேன். இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்பதை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நாம் மாநகராட்சி, நகராட்சிகளை கலந்து ஆலோசித்த பிறகு இதில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

649—(* வினா எண் 3914) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உடுமலைக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூடுதல் குழாய் பதித்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) உடுமலைக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூடுதல் குழாய் பதித்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முடிவடைந்து திட்ட வரைவு ஒன்று ரூ. 425.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதையும், எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் முடிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதன் திட்ட மதிப்பீடு நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல ரூ. 425.00 இலட்சங்கள் ஆகும். வருட பராமரிப்பு ரூ, 8.03 இலட்சங்கள் ஆகும். ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும், தமிழ்நாடு அரசிடமிருந்தும் கடனாகப் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பெற்றுள்ளது. வாரியத்தின் நிர்வாக ஒப்புதலைப் பெற்று அரசுக்கு வந்ததற்குப் பிறகு அரசு இதனைப் பரிசீலிக்கும்.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படு மென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதையும் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். வாரியத்தின் நிர்வாக ஒப்புதலைப் பெற்று அரசுக்கு வந்ததற்குப் பிறகு அரசு இதனைப் பரிசீலிக்கும்.

650—(* வினா எண் 4451) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?